

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.2.2026) சென்னையில் நடைபெற்ற தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் செய்தி தொடர்பாளர் – நடிகர் ச. ராஜேந்திரநாதன் அவர்களின் மகள் டாக்டர் நமிதா – கௌதம் கிரி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர்கள் எ.வ. வேலு, மா. சுப்பிரமணியன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தி.மு.க. தலைமை நிலைய செயலாளரும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழக தலைவருமான துறைமுகம் காஜா சென்னை அண்ணா அறிவாலயத்தில் தமது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (19.02.2026) சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## தி.மு.க. தலைமையிலான

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தே.மு.தி.க.!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.2.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் சந்தித்து, 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலையொட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இணைந்தார். இந்நிகழ்வின்போது, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி, முனைவர் க.பொன்முடி, கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் பொருளாளர் எல்.கே. சுதீஷ், தலைமை நிலையச் செயலாளர் பார்த்தசாரதி, துணை பொதுச் செயலாளர்கள் சந்திரன் மற்றும் பன்னீர்செல்வம் மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

## “இணைந்து பயணிப்போம் – வெல்வோம் ஒன்றாக”! முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்று மகிழ்ச்சி!

சென்னை, பிப்.21-

**மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் நேற்று முன்தினம் தே.மு.தி.க. இணைந்துள்ளது. இதனை வரவேற்று கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்து ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடர இணைந்து பயணிப்போம், வெல்வோம் ஒன்றாக” என்று தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தேசிய முற்போக்கு திராவிட கழகம் இணைந்தது குறித்து கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் மேல் மாறாத அன்பு கொண்டவரும், எனது அன்பு நண்பருமான ‘கேப்டன்’ விஜயகாந்த் அவர்கள் உருவாக்கிய தேசிய முற்போக்கு திராவிட கழகம், இன்று மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இணைந்திருப்பது பெரு மகிழ்ச்சி அளிக்கிறது!**

**சகோதரர் கேப்டன் உருவாக்கிய இயக்கத்தைத் தற்போது திறமையாக வழிநடத்தி வரும் பொதுச்செயலாளர் அன்புச் சகோதரி திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்களையும், அக்கட்சியின் நிர்வாகிகளையும் வருக வருக என வரவேற்கிறேன்.**

**கருப்பு சிவப்பைக் கொடியில் தாங்கியிருக்கும் தங்களது நல்வரவு நல்லுறவு தொடர்ந்து தமிழ்நாட்டின் உயர்வுக்குப் பங்களிக்கட்டும்!**

**திராவிட மாடல் ஆட்சி தொடரவும், தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறவும் இணைந்து பயணிப்போம்!**

**வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### பிரேமலதா விஜயகாந்த் பேட்டி!

தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் மகிழ்ச்சியுடன் இணைந்துள்ளோம் என்று தே.மு.தி.க., பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய தே.மு.தி.க., பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், தங்கள் கட்சியின் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளின் விருப்பத்துக்கு ஏற்ப தி.மு.க. கூட்டணியில் மகிழ்ச்சியுடன் இணைந்துள்ளோம் என்று தெரிவித்தார்.

அனைவரும் வரவேற்கும் வகையில் தி.மு.க. - தே.மு.தி.க., கூட்டணி அமைந்துள்ளது என்றும், 10 ஆண்டுகளுக்கு பிறகு இந்த கனவு நிறைவேறியுள்ளது என்றும் அவர் கூறினார். தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என்று விஜயகாந்த் மிகவும் விரும்பினார் என்றும் பிரேமலதா குறிப்பிட்டார்.

தே.மு.தி.க.,வுக்கான தொகுதிகள் ஒதுக்கீட்டை தி.மு.க. தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பார் என்றும், சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி அமோக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என்றும் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

## பா.ஜ.க. ஆளும் மராட்டியத்தில்

# முஸ்லிம் இட ஒதுக்கீடு ரத்து!

### “நாடு முழுவதும் இதைத்தான் செய்யத்துடிக்கிறது பா.ஜ.க.” - முதல்வர் மு.க.ஸ்டாலின்!

சென்னை, பிப்.21-

**மகாராஷ்டிராவில் முஸ்லிம்களுக்கான இட ஒதுக்கீட்டை பா.ஜ.க. நீக்கியுள்ளது இதைத்தான் நாடு முழுவதும் செய்யத் துடிக்கிறார்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

மகாராஷ்டிராவில் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கான இடஒதுக்கீட்டை நீக்கிய பா.ஜ.க! இதைத்தான் இந்தியா முழுவதும் செய்யத் துடிக்கிறார்கள்.

அண்மையில் மறைந்த மகாராஷ்டிர துணை முதலமைச்சர் அஜித் பவார் அவர்கள் 2014இல் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு 5% இடஒதுக்கீடு அளிக்கும் முடிவை எடுத்தார். அவர் மறைந்த துயரம் அனைவரின் மனதில் இருந்தும் அகல்வதற்குள் அவர் எடுத்த முடிவை நீக்கியுள்ளது சிறுபான்மையினர் வெறுப்பில் ஊறிப்போன பா.ஜ.க.!

இதுதான் இஸ்லாமிய மக்களுக்கு #AntiMinorityBJP அறிவித்திருக்கும் ரம்ஜான் பரிசா?

தப்பித் தவறிக் கூட தமிழ்நாட்டுக்குள் NDA வரவே கூடாதென ஏன் சொல்கிறேன் புரிகிறதா? வந்தால் நம் அனைவரின் இடஒதுக்கீடும் காலி!

இவர்களுக்கு ஒருநாளும் வளர்ச்சி அரசியல் தெரியாது; தெரிந்ததெல்லாம் மதவெறி சூழ்ச்சி அரசியல் மட்டும்தான். இத்தகைய வெறுப்பு எஞ்சின்கள் தமிழ்நாட்டில் ஓட அனுமதிக்க மாட்டோம்! “தமிழ்நாடா NDA வா?” எனும் 2026 ஜனநாயகப் போரில் தமிழ்நாடே வெல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

இதற்கிடையே மகாராஷ்டிராவில் இஸ்லாமியர்களுக்கான 5% இட ஒதுக்கீடு ரத்து என அறிவித்த பா.ஜ.க.வின் நடவடிக்கைக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

மகாராஷ்டிராவில் இஸ்லாமியர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பில் 5% இட ஒதுக்கீடு வழங்கி காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கூட்டணி அரசு 2014 ஆம் ஆண்டு அவசர சட்டம் இயற்றியது. அதன் பின்னர் வந்த பா.ஜ.க. அரசு அதனை சட்டமாக்கவில்லை. இந்நிலையில், 2014 அவசர சட்டம் மூலம் வழங்கப்பட்ட இடஒதுக்கீட்டை பா.ஜ.க .அரசு ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது. இதற்கு காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இது சிறுபான்மையினருக்கு எதிரான செயல், பாகுபாடான நடவடிக்கை என்று விமர்சித்துள்ளன.

மகாராஷ்டிராவில் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கான இடஒதுக்கீட்டை நீக்கிய பா.ஜ.க.வுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதான் இஸ்லாமிய மக்களுக்கு சிறுபான்மை சமூதாயத்துக்கு எதிரான பா.ஜ.க. அரசு அறிவித்திருக்கும் ரம்ஜான் பரிசா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## சட்டப்பேரவையால் முன்மொழியப்படுபவர்களை மட்டுமே

# ஆளுநராக நியமிக்கும் வகையில் சட்டத்திருத்தம்!

### தமிழ்நாடு அரசு அமைத்த உயர்நிலைக்குழு பரிந்துரை!

சென்னை, பிப். 21 -

**சட்டப்பேரவையால் முன்மொழியப்படுவர்களை மட்டுமே ஆளுநராக நியமிக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு பரிந்துரைத்துள்ளது.**

மாநிலங்களின் உரிமைகளை பாதுகாக்கவும், ஒன்றிய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்தவும் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்ட குழுவின் அறிக்கையை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார். ஆய்வறிக்கையில், நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்படும் அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் அனைத்துக்கும் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

மும்மொழிக் கொள்கைக்கு மாற்றாக ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழியை உள்ளடக்கிய இரு மொழிக் கொள்கையை பின்பற்று வதுடன், கல்வியில் மாற்று மொழியைத் திணிக்கக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநில சட்டப்பேரவையில் பெரும்பான்மை உறுப்பினர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மூன்று பேரில் ஒருவரை ஆளுநராக நியமித்து குடியரசுத் தலைவர் செயலாற்றும் வகையில் அரசமைப்புச் சட்டப்பிரிவு 155ஐ திருத்த வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. ஆளுநருக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் நீட்டிக்க இயலாத வகையில் பதவிக்காலத்தை வழங்க வேண்டும். ஆளுநராக பதவிவகித்த பிறகு, குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் பதவியைத் தவிர வேறு பொறுப்புகளை வகிக்க இடமளிக்கக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

ஆளுநரை சட்டப்பேரவை தீர்மானம் மூலமாக நீக்க வழிவகை செய்ய வேண்டும். மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் காலக்கெடு நிறைவடைந் தால் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக கருதவும் சட்டத்திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பேரவையில் பெரும்பான்மை இல்லாதபோது அமைச்சரவை ஆலோசனையின் பேரிலேயே சட்டப் பேரவையைக் கூட்ட வேண்டும். அதேபோன்று சட்டப்பேரவையை அமைச்சரவை ஆலோசனையின் பேரிலேயே கலைக்க வேண்டும். மாநில அரசையோ, சட்டப்பேரவையையோ பொதுவெளியில் ஆளுநர் விமர்சிக்கக்கூடாது. பேரவையில் இயற்றப்பட்ட சட்டத்தைத் தடுக்க ஆளுநரோ அல்லது குடியரசுத் தலைவரோ தங்களது சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தக் கூடாது. நாடாளுமன்றத் தேர்தல், குடியரசுத் தலைவர் தேர்தல் துணைத் தேர்தலை மட்டும் இந்திய தேர்தல் ஆணையம் நடத்த வேண்டும். மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களை மாநில தேர்தல் ஆணையம் நடத்துவது அவசியம் என்றும் பரிந் துரை செய்துள்ளது. நாடாளுமன்றத் தொகுதி மற்றும் பேரவைத் தொகுதி மறுவரையறைகளை மேற்கொள்ள மத்திய, மாநில ஆணையங்கள் அமைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி உள்பட கல்வியை பொதுப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவருவதுடன், மாநிலப் பல்கலைக்கழக வேந்தர் பொறுப்பிலிருந்து ஆளுநரை விடுவித்து நடுநிலையான ஒருவரை அப்பதவிக்கு நியமிக்க வகை செய்ய வேண்டும் என்று, முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் உயர்மட்டக்குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளது.



மன்னார்குடி அருகே எடமேலையூரில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கழக விவசாய தொழிலாளர் அணி மாநில முன்னாள் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அழகு. திருநாவுக்கரசு அவர்களின் திருஉருவச் சிலைக்கு, கழகப் பொருளாளர், முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு அவர்கள் மலர் மாலை அணி வித்து மரியாதை செய்தார். நிகழ்வில் சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தலையாமங்களம் ஜி.பாலு, அவைத்தலைவர் தன்ராஜ், நகர் மன்ற தலைவர் மன்னை.த. சோழராஜன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் அழகு.திருராஜா, ஒன்றிய செயலாளர்கள் நா.கவியரசு, டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா,கே.வி.கே. ஆனந்த்,நகர செயலாளர் வீரா. கணேசன் , பாசறை ராஜேந்திரன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.